பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 21 வெள்ளிக்கிழமை 06.08.2021 கதிர் 140

## மேலும் 123 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 123 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய

2

# முடக்கம் இல்லை விதிகள் இறுக்கம்

## ஜனாதிபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு



**கொழும்பு,ஓகஸ்ட் 06**

**நாட்டில் நிலவி வரும் கொவிட் - 19 நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெற்ற முக்கியமான கலந்துரையாடலைத் தொடர்ந்து, நாடு தழுவிய முடக்கலை விதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

**எனினும் சில கட்டுப்பாடுகள் விதிக்கத் தீரமானம் எட்டப்பட்டுள்ளதாக கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயற்பாட்டு மையத்தின் தலைவர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

2

## மேல் மாகாணத்தை உடன் முடக்க வேண்டும் கோட்டா

### இலங்கை மருத்துவ சபை கோரிக்கை

மேல் மாகாணத்தில் டெல்டா வைரஸ் பரவல் தீவிரம் அடைந்துள்ள நிலையில் அங்கு முடக்க நிலையை உடன் அறிவிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலங்கை மருத்துவ சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மருத்துவ சபை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது நாட்டிலுள்ள பெரும்பாலான மருத்துவமனைகளில் காணப்படுகின்ற தீவிர

2

## மேலும் 3 எம்.பிக்களுக்கு கொரோனாத் தொற்று!

இலங்கையில் மேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸ குட்டி ஆராச்சி, கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண திஸாநாயக்கவுக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, மாத்தளையில் உள்ள அவரது வீட்டில்

2

## சந்திநிதியான் ஆச்சிரம் தனிமைமைப்படுத்தலில்!

### மூடப்பட்டதாக அறிவிப்பு



யாழ்ப்பாணம்,ஓக.06

அதிக எண்ணிக்கையிலான பக்தர்களை அழைத்து அன்னதானம் வழங்கிய குற்றச்சாட்டில் சந்திநிதியான் ஆச்சிரம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் மூடப்பட்டுள்ளது.

2

## வவுனியாவிலும் ஒருவருக்கு 'டெல்டா'

நாட்டில் டெல்ரா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவிலும் டெல்ரா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி..சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில், வவுனியா வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவருக்கு டெல்ரா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சென்று வந்த நிலையில் காய்ச்சல் காரணமாக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் குறித்த நபர் சேர்க்கப்பட்டபோது அவரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யபபட்டது.

இதையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனை முடிவு வெளியாகிய நிலையில், அவருக்கு டெல்ரா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இருவருக்குத் தொற்றுறுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிர்வாக மேற்பார்வையாளர் ஒருவர், மாணவி ஒருவர் என இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 89 பேருக்கு இன்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களில் இருவருக்கு தொற்று

2

### வவுனியா மாவட்டத்தில்

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் உட்பட 46 பேருக்குத் தொற்று உறுதி

வவுனியா மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 உட்பட 46 பேருக்குக் கொரோன வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில், விநாயகபுரம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11பேருக்கும், நேரியகுளம் பகுதியில் 10 பேருக்கும், தோணிக்கல் பகுதியில் இருவருக்கும், உளுக்குளம் பகுதியில்

2

## பட்டப்பகலில் நகை திருட்டு; ஒருவர் கைது!

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட, வட்டு மேற்கு - கண்ணகி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்து இரண்டரைப்பவுண்நகைதிருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 4 ஆம் திகதி வீட்டின் உரிமையாளர் அவரது உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ள நிலையில் அவர்களது வீட்டில் இருந்த இரண்டரைப் பவுண் நகை களவாடப்பட்டுள்ளது.

2

## மேல் மாகாணத்தை உடன் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிகிச்சைப் பிரிவுகளும், சாதாரண வார்ட் களும் கொரோனா நோயாளர்களால் நிரம்பி இருக்கின்றன. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க பொருத்தமான மருத் துவ வசதிகளுக்குப் பற்றாக்குறை நிலவு கின்றது.

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதற்கு டெல்டா வகை வைரஸ்தான் காரணம்.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் வேகமாகப் பரவி வரும் டெல்டா வகை வைரஸ் மிகக் குறுகிய காலத்தில் நாட் டின் பிற பகுதிகளுக்கும் பரவும் அபாயம் உள்ளது.

ஒன்றுகூடல்களைக் குறைத்தல், முறையான முகக்கவசம் அணிதல், கிரு மிநாசினியால் கைகளைச் சுத்தம் செய் தல் மற்றும் சமூக இடைவெளி மூலம் மட் டுமே இந்த வைரஸ் பரவுவதைக் குறைக்க முடியும்.

அதேபோல் தற்போதைய கொரோ னாப் பரவலுக்கு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப் பாட்டைத் தளர்த்தியமை, சமூக நிகழ்வு கள், பொழுதுபோக்கு இடங்களைத் திறத் தல், பொதுப் போக்குவரத்தைப் பயன் படுத்துதல், வழிபாட்டுத் தலங்களைத் திறத்தல் ஆகியவற்றுக்கான கட்டுப்பாடு கள் தளர்த்தப்பட்டமை உள்ளிட்ட விட யங்கள்தான் முக்கிய காரணம்.

இதனிடையே, கொரோனா அச்சுறுத் தலுக்கு மத்தியிலும் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்ற சுகாதார தரப் பினர்களும் எதிர்காலத்தில் கொரொனாத் தொற்றால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளார்கள்.

எனவே, தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவ தற்கு உரிய நடவடிக்கைகளை ஜனாதி பதி முன்னெடுக்க வேண்டும் - என்றுள் ளது.

## சந்திரிநிதியான் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் அந்தப் பகு திக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் இவ்வாறு இன்று பிற்பகல் அறிவித்தல் ஒட்டப்பட்டு மூடப் பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமா னாறு செல்வச் சந்திநிதி ஆலயம் வரு டாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் ஆரம்பமாக உள்ள நிலையில் சுகாதாரக் கட்டுப்பாடுகளின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் திருவிழாக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று நண்பகலுக் குப் பின் சந்திநியான் ஆச்சிரமத்தில் அடி யவர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது.

அதன்போது கட்டுப்பாடுகளை மீறி அதிகளவானோரை ஒரு குறிப்பிட்ட இடத் துக்கு அழைத்து அன்னதானம் வழங் கினர் எனத் தெரிவித்து பொதுச் சுகாதார பரிசோதகரினால் ஆச்சிரமம் மூடப்பட் டது.

இதேவேளை, ஆலய சூழலில் அமைந்துள்ள கடைகளில் உள்ளோர் பி.சி.ஆர். பரிசோதனை எடுக்கும் வரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடி யாது என்றும் பொதுச் சுகாதாரப் பரி சோதகரினால் அறிவுறுத்தப்பட்டது.

## யாழ்.பல்கலைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுதி செய்யப்பட்டுள்ளது.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர் களில் 88 பேர் மாணவர்கள் என்றும் ஒருவர் நிர்வாக மேற்பார்வையாளராக பணியாற்றும் கல்விசாரா ஊழியர் என்றும் தெரியவந்துள்ளது.

குறித்த உத்தியோகத்தர் தனக்கு நோய் அறிகுறி காணப்பட்ட நிலையில் தானாக பரிசோதனைக்குச் சென்று பரிசோதனை மேற்கொண்டிருக்கின் றார்.

கடந்த வாரம் மற்றொரு ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்ட நிலையில் அவருடன் தொடர்பிலி ருந்த ஒருவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்று தெரிய வந்திருக்கின்றது. அவர் மூலமாகவே இன்று அடையாளம் காணப்பட்ட உத்தி யோகத்தருக்கு தொற்று ஏற்பட்டிருக்க லாம் என்று கருதப்படுகின்றது.

இதேவேளை இன்று அடையாளம் காணப்பட்ட மற்றையவர் வெளிமாவட் டம் ஒன்றைச் சேர்ந்த மாணவி என்று தெரியவந்துள்ளது. குறித்த மாணவியும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## மேலும் 123 பேர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றச்சாட்டில் இதுவரையில் கைதுசெய் யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 266 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## மேலும் 3 எம்.பிக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி யின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராச் சிக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர் வீட்டில் தனி மைப்படுத்தப்பட்டுள்ளார்.

## முடக்கம் இல்லை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி, ஐந்நூறு இருக்கைகள் கொண்ட திருமண மண்டபவங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

அத்துடன் ஐந்நூறு இருக்கைகளுக்கு குறைந்த திருமண மண்டபவங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 100 பேருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கையில் தற்போதைய கொரோ னாப் பரவல் நிலைமையைக் கருத்திற் கொண்டு, இதுவரையில் வழங்கப்பட்டி ருந்த அனுமதி சிலவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன

அரச நிறுவனங்களில் ஊழியர்களை பணிக்கு அமர்த்துவது தொடர்பில் நிறுவ னத் தலைவர்கள் தீர்மானிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரச நிகழ்வுகள் அனைத் தும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி வரையில் பிற்போடப்பட்டுள்ளன.

மேலும் மரண நிகழ்வுகளில் 25 பேர் மட்டுமே பங்குக்கொள்ள முடியும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரே குடும்பத்தைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவருக்கும், மதீனாநகர் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணிப் பகுதியில் ஒருவருக்கும், பெரிய உளுக்குளம் பகுதி யில் ஒருவருக்கும்,, பாரதிபுரம் பகுதியில் மூவருக்கும், காத்தார்சின்னக்குளம் பகுதியில் மூவருக்கும், சிறிராமபுரம் பகு தியில் 05 பேருக்கும், வவுனியா சிறைச் சாலை கைதிகள் 03 பேருக்கும், ஓலுமடு பகுதியில் ஒருவருக்கும், பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஒருவ ருக்கும், பம்பைமடுப் பகுதியில் ஒருவருக் கும், தட்டாங்குளம் பகுதியில் ஒருவருக் கும் என 46 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் கடந்த மூன்று நாட்களில் நேரியகுளம் பகுதியில் 64 பேர் தொற்றா ளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத்தனிமைப்படுத் தவும் சுகாதாரத்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## பட்டப்பகலில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவே சி.சி.ரி.வி. காட்சிகளை அடிப் படையாக வைத்து சந்தேகத்தின் பேரில் ஒருவரை நேற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் தானே நகை களைத் திருடினார் எனவும், அவற்றில் இரண்டு பவுண் நகையை நிதி நிறு வனத்தில் அடகு வைத்துள்ளார் எனவும், மிகுதி நகை தன்னிடம் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இவருடன் இணைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட இன் னொரு நபர் தலைமறைவாகியுள்ளார் எனவும், அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன எனவும் பொலிஸார் மேலும் தெரி வித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆசிரியர்களைச் சீண்டாதீர்கள்!

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' – என்பார்கள். அப்படி ஒரு வேலையைத்தான் ஆசிரியர்களுடைய விடயத்தில் ஆட்சித் தரப்பு செய்திருப்பதாகத் தோன்றுகின்றது. அதிபர், ஆசிரியர்களின் போராட்டங்களில் நியாயம் உள்ளதா, அதற்கு அனுமதிப்பதா என்ற விடயங்களுக்கு அப்பால், அவர்களின் போராட்டங்களை ஆளும் தரப்பு கையாண்ட தேவையற்ற சிக்கல்களை தேடி தருவதாகவே முடியும் போல தோன்றுகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழர் போராட்டம் என்றதும் அதை தடுப்பதற்கு நீதிமன்றங்களில் பொலிஸ் விண்ணப்பிப்பதும் –

பல நீதிமன்றங்கள் என்ன,ஏது என்று விசாரிக்காமல் தடையுத்தரவு கொடுப்பதும் – இங்கு வழமை.

அப்படி முன்னுக்குப் பின் முரணாக – இடத்துக்கிடம் வேறுபாடாக – நமது நீதித்துறையின் நியாயாதிக்கம் இருந்தமையை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியின் போது கண்டோம்.

ஆனால் இந்தத் தடை பாச்சா தென்னிலங்கையில் ஏனோ பலிக்கவில்லை. அங்கு நீதிமன்றங்கள் அட்டவதானமாக இருக்கின்றனவா அல்லது சட்டத்தரணிகள் எச்சரிக்கையாக செயற்படுகின்றார்களா என்பது தெரியவில்லை.

மக்களின் ஜனநாயக ரீதியான கருத்து வெளிப்பாட்டை அதிகாரம் கொண்டு ஆட்சித் தரப்புகள் அடக்குவதற்கு அங்குள்ள நீதிமன்றங்கள் இடமளிப்பது குறைவு.

இப்போது ஆசிரியர்களின் போராட்டத்திலும் அதுதான் நடந்திருக்கின்றது.

தமது சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வைத் தருமாறு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஜனநாயக ரீதியில் – அஹிம்சை முறையில் – நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது உட்பட 44 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட 44 பேரையும் பார்வையிடுவதற்கு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கொழும்பு துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸாவும், அவரின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றபோது அவர்களுக்கு அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

எனினும் அந்த 44 பேரையும் சரீரப் பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்து அவர்களுக்குப் பிணை மறுக்கக் காரணி ஏதுமில்லை என்றும் நீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது.

ஆசிரியர்கள் சமூகத்தில் மிக முக்கியமான தரப்பினர். அரசு துறையில் அதிக எண்ணிக்கை கூடியவர்கள் அவர்கள்தான்.

ஆசிரியர்களை சீண்டி, தேவையற்ற விதத்தில் குழப்பி, தொழிற்சங்க ரீதியில் அவர்கள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய கட்டாயத்துக்கு அவர்களைத் தள்ளுவது வீண் விபரீதங்களை –மோசமான விளைவுகளை – ஏற்படுத்தக் கூடியது என்பதை ஆட்சி தரப்பு புரிந்து கொள்ளாமல் இருப்பது வேடிக்கையானது.

ஆசிரியர்கள் உரிமைகளுக்காகப் போராட்டத்தை நடத்துகிறார்கள். அதில் சில நியாயங்கள் உள்ளன .அவற்றுக்கு மதிப்பு கொடுத்து, அவர்களைக் கையாள வேண்டும். அதை விடுத்து அவர்களை உதாசீனம் செய்து, புறமொதுக்கி, விட்டேத்தியாக நடக்க முற்படுகின்றமை தேவையில்லாமல் ஆசிரிய சமூகத்தைக் குழப்பும் வேலையாகும்.

ஆசிரியர்கள் சமூகத்தில் போதனை நடத்துபவர்கள். குரு ஸ்தானத்தில் இருப்பவர்கள். அவர்களை சீண்டும் விதத்தில் ஆட்சித் தரப்பு நடப்பது தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தும்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பார்கள். நீண்ட பின்னர் ஆசிரியர்கள் பொங்கி எழும் ஒரு தேவையற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இது நல்லதற்கல்ல. ஸ்ரீமாவோ இன் 1970 – 1977 ஆட்சிக்காலத்தில் ஆசிரியர்களின் போராட்டத்தைக் குதிரைப் படை கொண்டு அடக்க முற்பட்டதன் விளைவை சுதந்திரக் கட்சியை மறந்திருக்காது என இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்க செயலாளர் குறிப்பிட்டிருக்கின்ற விடயம் அவதானிக்க வேண்டியதாகும்.

அதன் பின்னர் வந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீமாவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி தோல்வி அடைந்தது. வரலாற்றில் முதற் தடவையாக பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை கூட அது பறிகொடுத்தது. எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தின் வசமானது. அந்த வீழ்ச்சியிலிருந்து சுதந்திரக் கட்சி மீளுவதற்கு 17 ஆண்டு கள் பிடித்தன.

சமூகத்தில் குருவாக மதிக்கப்படும் ஆசிரியர்களைக் கையாள்வதில் பொறுப்பும் சிரத்தையும் அவதானமும் தேவை.

இராணுவப் பாணியிலான எதேச்சதிகார ஆட்சி முறையைத் தேர்ந்தெடுத்து இருக்கும் கோட்டாபய அரசுக்கு இந்த விடயம் சரியாகப் போலும். அதனால்தான் ஆசிரியர்களுடன் பிழையான பக்கத்தில், பிழையான முறையில் உரசிப் பார்க்கிறது அது. தொழிற்சங்க ரீதியில் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் வேலையையும் ஆட்சி நிர்வாகமே செய்கின்றது. விளைவுகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# உள்ளூர் தேவை அதிகரித்தபோதிலும் தடுப்பூசிகள் திட்டமிட்டபடி வந்தடையும்

## இலங்கைக்கு குறைவிடோம் என்கிறது சீனா

சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் காரணமாக சினாபோர்ம் தடுப்பூசியின் உள்நாட்டு தேவை அதிகரித்துள்ள போதிலும், முன்னதாகத் திட்டமிட்டபடி சீனா, இலங்கைக்கான மேலும் நான்கு மில்லியன் தடுப்பூசிகளை இவ்வாரம் வழங்கும் என்று உறுதிபடுத்தியுள்ளது.

அதன்படி 2.14 மில்லியன் தடுப்பூசி டோஸ்கள் இன்றைய தினமும், 1.86 மில்லியன் தடுப்பூசி டோஸ்கள் ஞாயிற்றுக்கிழமையும் இலங்கை வந்தடையும் என்பதை இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் உறுதிபடுத்தியுள்ளது.

நாட்டில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளில் 72 சதவீதமானவை சினோபோர்ம் தடுப்பூசிகளாகும்.

கடந்த மார்ச் 31ஆம் திகதி 06 லட்சம் தடுப் பூசிகள், மே மாதம் 26 ஆம் திகதியன்று 05 லட்சம் தடுப் பூசிகள் கிடைக்கப்பெற் றி ருந்த நிலையில், கடந்த மாத இறுதிப் பகுதியில் வழங்கப்பட்ட 16 லட்சம் தடுப்பூசிகளுடன் மொத்தமாக 27 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளை சீனா அன்பளிப்புச் செய்தது.

# 600 வைத்தியசாலைகளில் தாதியர் வேலைநிறுத்தம்

நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 600 வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் நேற்று வேலைநிறுத்தம் முன்னெடுத்துள்ளனர்.

அதன்படி அவர்கள் நேற்று காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரையில் இவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என அரச தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து சுகாதார பணியாளர்களையும் கட்டாயமாக சேவைக்கு சமுகமளிக்குமாறு அரசாங்கம் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சுற்றறிக்கையை இரத்து செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டெங்கு நோயால் மரண அபாயம்!

நாட்டில் தற்போது டெங்கு நோயால் அதிகமானவர்கள் இறக்கும் அபாயம் காணப்படுவதாக பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

2 நாள்களுக்கு மேல் காய்ச்சல் நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை டெங்கு நோய் கொரோனாவைப் போன்று ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவது தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

டெங்கானது கொரானா தொற்றை விடவும் விரைவாக பரவும் என்றும் அவர் மேலும் கூறினார்.



# இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்பு கிளிநொச்சியில் நேற்று

கிளிநொச்சி – விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.குறித்த வயல் காணியைச் சீரமைத்த காணி உரிமையாளர் எச்சங்கள் இருப்பதை அவதானித்தமையையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி குறித்த எச்சங்களை பார்வையிட்ட பின்னர் எச்சங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்தோடு, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பி.சி.ஆர்., அன்டிஜென் பரிசோதனைகளுக்கு அடுத்த வாரம் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்டிஜென் பரிசோதனைகளுக்கான கட்டுப்பாட்டு விலை அடுத்தவாரம் நிர்ணயிக்கப்படும் என்று கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர். சோதனைகள் நடத்தும் 45 வைத்தியசாலைகளும், விரைவான அன்டிஜென் சோதனைகள் நடத்தும் 43 வைத்தியசாலைகளும் 21 மாவட்டங்களில் நுகர்வோர் விவகார ஆணைய அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டன.

இந்த ஆய்வில் கொவிட் தொற்று வெவ்வேறு விலை விகிதங்களில் முன்னெடுக்கப்படுவது தெரியவந்துள்ளது.

அதன்படி, ஒரு பி.சி.ஆர். சோதனைக்கு 5,000 - 9,500 ரூபாவுக்கு இடையிலும், அன்டிஜென் சோதனைக்கு 2,000 – 5,900 ரூபா வரையிலும் வசூலிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். சோதனைகள் நாட்டில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் பல்வேறு விலைகளில் நடத்தப்படுகின்றமையால், நிலைமையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அமைச்சகத்துக்கு வரவழைக்கப்பட்டு, அமைச்சருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது. இதன்போதே மேற்கண்ட விடயம் தீர்மானமாக எடுக்கப்பட்டது.

# சாதாரன சேவையின்கீழ் கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் இடைநிறுத்தம்

சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்கும் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு, பத்தரமுல்லவில் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பல அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவை தேவைகளைக் கொண்ட தனிநபர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட் ஒரு நாள் சேவையின் கீழ் வழங்கப்படும்.

அதற்காக குறைந்த அளவிலான ஊழியர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# ஹொங்கொங் குடியிருப்பாளர்களுக்கு அமெரிக்காவில் தற்காலிகமான புகலிடம்




## அமெரிக்கா அறிவிப்பு

ஆயிரக்கணக்கான ஹொங்கொங் குடியிருப்பாளர்களுக்கு அமெரிக்காவில் தற்காலிக பாதுகாப்பான புகலிடம் வழங்கப்பட உள்ளதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

ஹொங்கொங்கின் சுதந்திரம் மீறப்படுவதால், அமெரிக்கா, ஹொங்கொங் வாசிகளை 18 மாத காலம் தங்க அனுமதிக்கும் என பைடன் உறுதிப்படுத்தினார்.

இதன்மூலம், அமெரிக்காவில் உள்ள ஆயிரக் கணக்கான ஹொங்கொங் குடியிருப்பாளர்கள் பயனடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையில்,'ஹொங்கொங் வாசிகள் தங்குவதற்கு கட்டாய வெளிநாட்டுகொள்கை காரணங்கள் உள்ளன. சீனா அதன் மீதமுள்ள ஜனநாயக செயல்முறைகள் மற்றும் நிறுவனங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தி வருகிறது, கல்வி சுதந்திரத்திற்கு வரம்புகளை விதித்து, சுதந்திரத்தை நசுக்குகிறது.

புதிய பாதுகாப்பு ஆட்சியில் ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உட்பட 100இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்' எனக் கூறினார்.

இருப்பினும், வொஷிங்டனில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லியு பெங்யு, 'அமெரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்தார்.

பைடன் உண்மைகளை புறக்கணித்து திரிவுபடுத்தி, சீனாவின் உள் விவகாரங்களில் கடுமையாகத் தலையிடுகிறார்' என்று பெங்யு கூறினார்.

ஆனால், அமெரிக்காவின் ஆராய்ச்சியாளரான மேகி ஷூம், ஹொங்கொங்கிற்குத் திரும்புகின்றமை குறித்த நிலைக்கு மத்தியில் பல மாணவர்கள் குழப்பத்தில் இருக்கின்றனர் எனவும் பைடனின் செய்தியை வரவேற்கிறோம் எனவும் தெரிவித்தார்.

மேலும், 'எங்களைக் கைவிடாத இந்த பைடனின் முடிவை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அமெரிக்கா எங்களைக் கைவிடவில்லை' என கூறினார்.

பிராந்தியத்தில் சீனாவின் பாதுகாப்புச் சட்டம் கடந்த ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, ஹொங்கொங்கில் இருந்து நிரந்தர வதிவிடத்துக்கான பாதையை பிரித்தானியா வழங்கியுள்ள நிலையில், அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



## ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் எச்சரிக்கை!

தங்கள் நாட்டு எண்ணெய்க் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகஇஸ்ரேல்எச்சரிக்கை விடுத் துள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த இஸ்ரேல் பாதுகாப்புத்துறை பெஞ்சமின் கான்ட்ஸ், 'எம்வி மெர்சிர் ஸ்ட்ரீட் எண்ணெய்க் கப்பல் மீது தாக்குதல் நடத்திய ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க இஸ்ரேல் தயாராக உள்ளது.

ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை கட்டாயம் எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இனி உலகின் மற்ற நாடுகளும் ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' எனக் கூறினார்.

பெஞ்சமின் கான்ட்ஸின் இது தொடர்பாக ஈரான் உடனடியாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

லண்டனில் செயற்பட்டு வரும் ஸோடியாக் மாரிடைம் நிறுவனத்தின் எம்வி மெர்சிர் ஸ்ட்ரீட் என்ற எண்ணெய்க் கப்பல் ஓமனுக்கு அருகே அரபிக் கடலில் கடந்த வாரம் சென்றுகொண்டிருந்தபோது தாக்குதலுக்குள்ளானது. இதில் பிரித்தானியா மற்றும் ரோமேனியாவைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

ஸோடியாக் மாரிடைம் லண்டனில் செயற்பட்டு வந்தாலும், அந்த நிறுவனம் இஸ்ரேலைச் சேர்ந்த ஏயல் ஓஃப் நிறுவனத்துக்குச் சொந்தமானதாகும். லைபீரியக் கொடியேற்றிச் சென்ற மெர்சிர் ஸ்ட்ரீட் கப்பல், ஜப்பானுக்குச் சொந்தமானதாகும். இந்தத் தாக்குதலுக்கு ஈரான்தான் காரணம் என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது. எனினும், ஈரான் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

## உலக சுகாதார நிறுவனத்தின் கோரிக்கையை பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி நிராகரித்தது!




தடுப்பூசி வழங்கலில் நிலவும் ஏற்றத்தாழ்வை சீராக்கும் வகையில், டெல்டா வைரஸுக்கு எதிராக மூன்றாவது டோஸ் வழங்குவதை நிறுத்துங்கள் என உலக சுகாதார நிறுவனம் முன்வைத்திருந்த கோரிக்கையை பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன.

மாறுபாடு அடைந்துள்ள டெல்டா, டெல்டாபிளஸ்வைரஸ்களாகஜேர்மனி, பிரான்ஸ் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மூன்றாவது டோஸ் செலுத்த தயாராகி வருகின்ற நிலையில் உலக சுகாதார நிறுவனத் தலைவர் டெட்ரோஸ் அதோனோம் கேப்ரியேஸஸ் இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிராகரித்துள்ளன. செப்ரெம்பர் மாதம் முதல் முதியவர்கள் மற்றும் எளிதில் உடல்நிலை பாதிக்கக்கூடிய நபர்களுக்கு தடுப்பூசிமூன்றாவதுடோஸ்செலுத்ததிட்டமிட்டுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். செப்ரெம்பர் மாதம் முதல் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத நோயாளிகள், முதியவர்கள் மற்றும் முதியோர் வசிப்பவர்களுக்கு பூஸ்டர் டோஸ்களை செலுத்த ஜேர்மனி அரசாங்கம் விரும்புவதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை கூறியுள்ளது.

பிரான்ஸில் இதுவரை 64.5 சதவீத மக்களுக்கும், ஜேர்மனியில் 62 சதவீத மக்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பிரான்ஸில் 49 சதவீதம் பேருக்கும், ஜேர்மனியில் 53 சதவீதம் பேருக்கும் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

## கனடாவில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து 14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர்

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, கனடாவில் மொத்தமாக 14 லட்சத்து 582பேர் குணமடைந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், 1,445பேர் பாதிக்கப்பட்டதோடு 11பேர் உயிரிழந்தனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 25 ஆவது நாடாக விளங்கும் கனடாவில் இதுவரை மொத்தமாக 14 லட்சத்து 36ஆயிரத்து 182பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 26ஆயிரத்து 637பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள எட்டாயிரத்து 963பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் 231பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.





## மெக்ஸிகோவில் கொவிட் பாதிப்பு 29 லட்சம் கடந்தது!

மெக்ஸிக்கோவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றால் மொத்தமாக, 29 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, மெக்ஸிக்கோவில் 29 லட்சத்து ஆயிரத்து 94பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 15ஆவது நாடாக விளங்கும் மெக்ஸிக்கோவில் மொத்தமாக இரண்டு லட்சத்து 42ஆயிரத்து 547பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றால், 20ஆயிரத்து 685பேர் பாதிக்கப்பட்டமையோடு 611பேர் உயிரிழந்துள்ளனர். தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மூன்று லட்சத்து 88ஆயிரத்து 120பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் நான்காயிரத்து 798பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக 22 லட்சத்து 70ஆயிரத்து 427பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.



# பெயர்களில் உள்ள சாதியை நீக்குவது புரிதல் இல்லாத செயல் பாடநூல்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்து ராமதாஸ் அறிக்கை

தமிழ்நாட்டில், பாடசாலைப் பாடப் புத்தகங்களில் அறிஞர்கள், பெயர்களின் பின்னால் உள்ள சாதிப் பெயர்கள் நீக் கப்பட்டுள்ளன. இதற்கு வரவேற்பும் எதிர்ப் பும் பல தரப்பிலிருந்தும் எழுந்துள் ளன.

பாடநூல்களில் இடம்பெற்றிருக்கும் தலைவர்களின் பெயர்களில் உள்ள சாதி யை நீக்குவது என்பது புரிதல் இல்லாத செயலாகவே தோன்றுகிறது என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரி வித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறு வுநரான டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பில், தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தின்படியான 12ஆம் வகுப்பு பொதுத்தமிழ் பாடநூலில் பாட ஆசிரியர் பெயராகவும், வரலாற்றிலும் இடம் பெற்றிருக்கும் தமிழறிஞர்கள் பலரின் பெயர்களில் இருந்து சாதிப்பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. சாதிகளை ஒழிக்க வேண்டும் என்ற அரசின் நோக் கம் வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் கூட, இத்தகைய நடவடிக்கைகள் சாதி க்குப் பதிலாக அடையாளத்தைத்தான் அழிக்கும்.

2021-22 ஆம் கல்வியாண்டில் பயன்படுத்துவதற்காக 2020 -ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட பொதுத்தமிழ் பாடநூலின் திருத்திய பதிப்பில், பண் டைய காலத்து பள்ளிக்கூடங்கள் என்ற தலைப்பிலான பாடத்தின் ஆசிரியர் பெயர் உ.வே.சாமிநாதய்யர் என்பதிலி ருந்து உ.வே.சாமிநாதர் என்று மாற் றப்பட்டிருக்கிறது.

வ.உ.சிதம்பரம் பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யரின் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முதல் தமிழ் நாவலை எழுதிய மாயவரம் வேதநாயகம் பிள்ளை, தமிழன் என்று சொல்லடா... தலை நிமிர்ந்து நில்லடா என்று தமிழரின் தன்மானத்தை உலகிற்கு உணர்த்திய நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை, இந்தியாவின் முதல் பெண் மருத்துவரும், சமூகப் போராளியுமான முத்துலட்சுமி ரெட்டி, இலங்கைத் தமிழ் அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் தமிழறி ஞர்களின் பெயர்களின் உள்ள சாதிப் பெயர்களும் நீக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் தேசிகர், தீக்ஷிதர் போன்ற சாதிப் பெயர்கள் தமிழ் பாட நூலில் இருந்து நீக்கப்படவில்லை.

தமிழறிஞர்கள் மற்றும் தலைவர் களின் பெயருக்கு பின்னால் உள்ள சாதிப்பெயர்கள் நீக்கப்பட்டதற்குக் கார ணம் சாதிஒழிப்பாகத்தான் இருக்க வேண் டும் என்று யூகிக்க முடிகிறது. சாதியை ஒழிக்க வேண்டும் என்ற அரசின் நோக் கத்தைக் குறை கூற முடியாது; மாறாக வரவேற்கவும், பாராட்டவும்தான் வேண்டும். அது எட்டப்பட வேண்டிய இலட்சியமும் கூட. அனைத்து மக்க ளிடமும் சமத்து வத்தை ஏற்படுத்துவதன் மூலம் தான் சாதியை ஒழிக்க முடியும். அதற்காகத் தான் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைநிலையை உயர்த்துவதற்காக கல்வி மற் றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதி நடவடிக் கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற் கொண்டு வருகின்றன. அத்தகைய நடவடிக்கை கள் தொடர வேண்டும்.

அதை விடுத்து பாடநூல்களில் இடம் பெற்றிருக்கும் தலைவர்களின் பெயர் களில் உள்ள சாதியை நீக்குவது என்பது புரிதல் இல்லாத செயலாகவே தோன் றுகிறது. உ.வே.சாமிநாத வ.உ.சிதம் பரம் பிள்ளை உள்ளிட்டவர்களின் பெயர் களில் உள்ள சாதிப்பெயர் அவர்களின் அடையாளம். உ.வே.சாமிநா தய்யர் என்றால் தமிழ்த்தாத்தா என்ற பெயர் நினைவுக்கு வரும்; அந்தப் பெயர் நினைவுக்கு வந்தால் ஓலைச்சுவடி களில் இருந்த தமிழ் இலக்கியங்களை பதிப்பித்தார் என்பது நினைவுக்கு வரும். மாறாக உ.வே.சாமிநாதர் என்றால் அதே பெயர், அதே முதலெழுத்துகளுடன் வாழ்ந்த ஆயிரக்கணக்கானோரில் ஒருவர் என்று கருதி வருங்கால சந்ததி யினர் கடந்து சென்றுவிடக்கூடும். இது அறிஞர்களின் அடையாளத்தைச் சிதைக் கும். வ.உ.சிதம்பரம் பிள்ளை எவரும் சாதிக் காகப் போற்றப்படவில்லை; சாத னைகளுக்காகவே போற்றப்படுகின்ற னர். அதனால், அவர்களின் பெயர்க ளுக்குப் பின்னால் சாதிப் பெயர் இருப்ப தால் சாதி பரவாது. இதனை உணர்ந்து தமிழக அரசு செயற்படவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

# கொரோனாத் தொற்று கேரளாவில் அதிகரிப்பு

கேரளாவில் கொரோனாப் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்துவருகிறது. கடந்த சில தினங்களாக கேரளாவில் தினசரி தொற்று பாதிப்பு 20 ஆயிரத்தைத் பதிவாகி வரு கிறது. அந்த மாநிலத்தில் இதுவரை இத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 35 இலட்சத்தைத் தாண் டியுள்ளது.

இந்தியாவின் தினசரி கொரோனா பாதிப்பில் சுமார் 40 சதவீதம் கேரளாவில் மட்டும் பதிவாகிவருகின்றது.

கேரளாவில் தொடர்ந்து அதிக அளவிலான கொரோனாப் பாதிப்புகள் பதி வாகிவரும் நிலையில் இந்திய தேசிய நோய்க்கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குனர் சுஜீத் சிங் தலைமையிலான 6 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கேரளா சென்ற நிபுணர் குழு இரு பிரிவா கப் பிரிந்து ஆய்வுகளை மேற்கொண்டது.

டாக்டர் எஸ்.கே.சிங் தலைமையிலான மத்திய குழு, தொற்று அதிகமுள்ள 8 ம ாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டது. எர்ணாகுளம், ஆலப்புழா, கொல்லம், ம லப்புரம், கோட்டயம், பத்தினம்திட்டா ஆகிய 6 மாவட்டங்களில் இதுவரை இந்த




மத்திய குழு ஆய்வுகளை நிறைவு செய் துள்ளது.

கொரோனாத் தடுப்பு விதிமுறைகளை ஒழுங்காகக்கடைபிடிக்காததே கேரளாவில் தொற்றுப் பாதிப்பு அதிகரிக்க காரணம் என அங்கு ஆய்வு செய்த நிபுணர்கள் இந்திய மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள் ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய குழு ஆய்வறிக்கையில் கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டறிவதிலும் தொற்றுப் பரிசோதனைகளைச் செய்வதி லும் கேரள அரசு மந்தமாக இருக்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதென்றும், ம க்களும் கொரோனாத் தடுப்பு விதிகளைப் பின்பற்றாமல் அலட்சியம் காட்டுவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# பெகாசஸ் ஒட்டுக்கேட்பு விவகார வழக்கு உச்ச நீதிமன்றில் விசாரணை



இஸ்ரேலின் என்.எஸ்.ஓ. அமைப் பின் பெகாசஸ் உளவு மூலம் இந்தி யாவில் ஊடகவியலாளர்கள், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட பலரின் கை பேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகத் தகவல் வெளியானது. இந்த பெகாசஸ் ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தக்கோரி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில், பெகாசஸ் ஒட்டுக் கேட்பு விவகாரம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசா ரணை உச்சநீதிமன்ற தலைமை நீதி பதி அமர்வு முன் முதன் முதலாக விசார ணைக்கு வந்தது. அப்போது, பெகாசஸ் மென்பொருள் உளவு பார்க்கப்பட்ட வர்கள் யாரும் இதுவரை எந்த முறைப் பாடும் அளிக்காதமை ஏன்? என்று நீதிமன்றம் கேள்வியெழுப்பியுள்ளது.

பத்திரிகைகளில் வெளியான செய்தி களின் அடிப்படையிலேயே வழக்கு தொடரப்பட்டுள்ளது. அப்படியாயின் பத்திரிகை செய்திகளின் தன்மையை ஆராய்ந்த பிறகே விசாரணைக்குள் செல்ல முடியும். பெகாசஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம் மிகவும் முக்கியத்து- வம் வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை. கைப்பேசிகள் உளவு பார்க்கப்பட்ட விவகாரம் கடந்த 2019 ஆம் ஆண்டு நடை பெற்றது. அதைதற் பொழுது ஏன் அவசர அவசர மாக விசாரிக்க வேண்டும் என்று கோருகிறீர் கள்? என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கேள்வி எழுப் பியுள்ளார். 2019 முதல் உளவு பார்க்கப் பட்டாலும் அது குறித்த விவரம் தற் போதுதான் வெளி யாகி உள்ளது. அத னால்தான் இத்தனை நாட்களாக யாரும் முறைப்பாடு எதுவும் தெரிவிக்கா மல் இருந்தனர் என மனு தாரர் தரப்பி லிருந்து நீதிமன்றுக்குப் பதி லளிக் கப்பட்டுள்ளது.

நமக்குத் தெரியாமலேயே நம் வாழ்க்கையில் நடக்கும் விடயங்களை உளவு பார்க்கக்கூடியது பெகாசஸ். தொழில் நுட்பம் மூலம் தனிநபர் இரகசி யத்தை வேவு பார்ப்பது கருத்துச் சுதந்தி ரத்துக்கு எதிரானது என மனு தாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கபில் சிபில் நீதிமன்றில் தெரி வித்திருந்தார்.

பெகாசஸ் ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பான ரிட் மனுக்கள் தொடர்பாக அனைத்து மனுதாரர்களும் தங்கள் மனு நகலை மத்திய அரசுக்கு வழங்கு மாறு உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண் டது. இந்த வழக்கு விசாரணை வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# அன்னைத் தமிழில் அர்ச்சனை திட்டம் சென்னையில்

## அமைச்சர் சேகர் பாபு ஆரம்பித்துவைத்தார்

தமிழகத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக முதலைமைச்சர் தெரிவிப்பார் என்று கூறிய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, தமிழகத்தில் அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய நடவடிக்கை எடுக் கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதற்கான அறிவிப்பு கடந்த 3ஆம் திகதி வெளியானது.

இதனையடுத்து, நேற்றையதினம் மயி லாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் தமிழில் அர்ச்சனைத் திட்டத்தை அற நிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு ஆரம்பித்து வைத்தார்.

அதன்படி, இன்று முதல் தமிழகத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 47 கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற திட்டத்தின் கீழாக தமிழில் அர்ச்சனை செய்யும் செயல் படுத்தப்படுகிறது.



சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை களில் சேலம் மாவட்டத்திலுள்ள சுற்றுலாத்தளமான ஏற்காட்டிற்கு மக்கள்

# வார இறுதி நாள்களில் ஏற்காட்டிற்கு சுற்றுலா செல்லத் தடை கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை

வருவதற்கு மாவட்ட ஆட்சியர் கார்மேகம் தடைவிதித்துள்ளார்.

வார இறுதி நாள்களில் ஏற் காட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால், கொரோனாத் தடுப்பு முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக இந் தத் தடை அவர் தெரிவித்துள்ளார். எதிர் வரும் 9 ஆம் திகதி வரை இந்த உத்தரவு அமலில் இருக் கும் எனக் கூறியுள்ள ஆட்சியர், தேவைப்பட்டால் தடைக்காலம் நீடிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிற நாள்களில் ஏற்காட்டுக்கு வருபவர்கள், கொரோனாப் பரிசோத னைச் சான்றுகளை வைத்திருக்க வேண்டும் எனவும், உள்ளூர்வாசிகள் தனிநபர்ஆவணங்களைக்காண்பித்துச் செல்லலாம் எனவும் அவர் கூறியுள்ளார். இதனிடையே, அதே மாவட்டத்தின் எடப்பாடியில் உள்ள கொங்கணாபுரம் வாரச்சந்தையை மூட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மீண்டும் கொரோனாப் பரவலில் அதிகரிப்புக் காணப்படுவதால் பல மாவட்டங்களிலும் வார இறுதி நாட்களில் கட்டுப்பாடுகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனைப் பிராந்தியத்தில் தீவிரமடைகிறது கொரோனா

## ஒரே நாளில் ஐவர் மரணம்

கல்முனைப் பிராந்தியத்தில் வைரஸ் தொற்று மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது, இத்தாக்கத்தால் ஒரே நாளில் ஐவர் உயிரிழந்துள்ளனர் .

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகப் பிரிவில் கடந்த சில நாள்களாக கொரோனா தொற்று வீதம் அதிகரித்து வருகின்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை 81 பேர் புதிதாக கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்களுள் ஆகக்கூடிய தொற்றாளர்கள் கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவில் இருந்து 21 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். நிந்தவூர் சுகாதாரப் 13 பேரும் பொத்துவில் சுகாதாரப் பிரிவில் 09 பேரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் கொரோனா தொற்று காரணமாக கல்முனைப் பிராந்தியத்தில் ஒரே நாளில் ஐவர் உயிரிழந்திருக்கின்றனர். இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். இங்கு கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 79 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 4150 ஐக் கடந்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்ப்பட்டிருக்கிறது என்பதால் நாட்டில் கொரோனா தாக்கம் குறைந்து விட்டது என்பது அர்த்தமல்ல. ஆனால் பாமரர்கள் என்று எல்லோருமே பொறுப்பின்றி நடந்துகொள்கின்றனர்.

ஆகையால், கல்முனைப் பிராந்தியத்தில் இனிமேல் முகக்கவசம், சமூக இடைவெளி, கைச்சுத்தம் போன்ற சுகாதார நடைமுறைகள் மிகவும் இறுக்கமாக மேற் பார்வை செய்யப்படும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் .

அனைவரினதும் பாதுகாப்புக் கருதி அனைவருமே மாஸ்க்கை சரியாக அணியுங்கள். சமூக இடைவெளியை கண்டிப்பாக கடைப்பிடியுங்கள், கைகளை அடிக்கடி கழுவுங்கள். மீறுவோர் மீது எமது நடவடிக்கைகள் அதிரடியாக இருக்கும்.

அத்துடன் ஏற்றிக் கொள்வது கட்டாய விடயமாக செயற்படுத்தப்படும். தடுப்பூசி போடாதவர்கள் அதிகளவு பொதுமக்கள் கூடும் இடங்களில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமது பிராந்தியத்தில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாத வைத்தியரும் அவரின் மனைவியும் இரண்டு பிள்ளை களும் தாய் தந்தையருமாக அவரது குடும்பத்தில் ஆறுபேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இது தடுப்பூசி மிக முக்கியம் என் பதை எடுத்துக் காட்டுகிறது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்

# வாழைச்சேனையில் பையொன்றில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வழைச்சேனை பொதுச் சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் பையொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வாழைச்சேனை அல்லாப் பிச்சை வீதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த பெண் கடந்த வியாழக்கிழமை காலை 11 மணியளவில் வங்கிக்கு சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார்.

பெண்ணை அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் ஓட்டோ ஒன்றில் ஏற்றிச் சென்றார் எனவும் அவரே பெண்ணை கொலை செய்துள்ளார் எனச் சந்தேகிப்பதாகவும் உயிரிழந்த பெண்ணின் கணவர் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

அந்த பெண் மாவடிச்சேனை பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் வைத்து கொலைசெய்யப்பட்ட பின்னர், உரப் பையில் இட்டு ஓட்டோவில் அவரது உடலை எடுத்துச் சென்று வழைச்சேனை பொதுச் சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் சந்தேக நபர் வைத்து விட்டு சென்றார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி கடை உரிமையாளரிடம் பை ஒன்றை கொண்டு வந்த நபர் அதனை தனது கடையில் வைத்து விட்டு சிறிது நேரத்தின் பின் எடுத்துச் செல்வதாகக் கூறி விட்டு, பையை வைத்து சென்றுள்ளார் எனக் கடை உரிமையாளர் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார். குடும்பத்துக்குள் ஏற்பட்ட கொடுக்கல், வாங்கல் முரண்பாடே இந்தக் கொலைக்குக் காரணம் என்று உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பெண்ணை கொலை செய்த நபரையும், பெண்ணின் சடலம் வைக்கப்பட்ட கடை உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளமையுடன் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொதுமக்கள் கவனயீனமாக செயற்பட வேண்டாம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



கொரோனாத் தடுப்பு மருந்தைபெற்றுவிட்டோம் எனநினைத்து கவனயீனமாக மக்கள் செயற்பட வேண்டாம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர்ஏ.ஆர்.எம். தௌபீக் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை நீதிமன்றவீதியில்அமைந்துள்ள கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 8 லட்சத்து 50 ஆயிரம் தடுப்பு மருந்துகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், அதில் 8 லட்சத்துக்கும்மேற்பட்டவர்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப் பிட்டார்.

மேலும் 7 லட்சத்து ஆயிரத்து 966 பேருக்கு முதலாவது தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளதாகவும், 75701பேருக்கு இரண்டாவது தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் குறிப்பிட்டார்.

அத்துடன் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 507 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் ஏழு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 230 தொற்றாளர்களும், இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள்பணியகத்துக்கு உட்பட்ட பகுதியில் 127 பேருக்கும், கல்முனைப் பிராந்தியத்தில் 81பேரும் 5 மரணங்களும் திருகோணமலைமாவட்டத்தில் 70பேருக்கும்கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும்முதலாவது தடுப்பு மருந்தை பெற்று விட்டோம் எனும் எண்ணத்தில் கவனயீனமாக இருந்துவிட வேண்டாம் எனவும், கடமைகளுக்கு செல்பவர்கள் தொடர் ச் சியாக முகக்கவசங்களை அணியுமாறும்,சமூகஇடைவெளிகளை பேணிநடக்குமாறும்,கைகளை கழுவி சுத்த மாக வைத்திருக்குமாறும் மக் கள் அதிகளவில் இருக்கும் இடத்துக்குச் வேண்டாம் என வும் கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள்பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஹிஷாலினியின் மரணத்துக்கு மட்டு மாநகரசபையில் கண்டனம்



மட்டக்களப்பு மாநகரசபையின் மாதாந்த சபை அமர்வு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நேற்று காலை மாநகரசபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், சபையின் பதில் செயலாளராக மாநகர பிரதி ஆணையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சபைக்குரிய சம்பிரதாயங்களுடன் இடம்பெற்ற இச்சபை அமர்வில் முதல்வரின் தலைமையுரையின் பின்னர் நிதிக் குழுவின் சிபாரிசுகள், முன்மொழிவுகள் சபை அனுமதிக்காக முதல்வரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் இதன் போது ஆராயப்பட்டதுடன், எதிர் காலத்தில் மக்கள் நலன் சார்ந்து பல்வேறு திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டிருந்தது. அத்துடன் கடந்த ஆண்டுக்குரிய பாதீட்டில் முன்மொழி யப்பட்டு நிறைவு பெறாததிட்டங்களைவிரைவாக முடிப்பது தொடர்பிலும் வேலைக்குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

குறித்த அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணியாற்றி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் தவராசாவினால் முன்வைக்கப்பட்ட கண்டன தீர்மானம் உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதுடன் சிறுமியின் உயிரிழப்புக்கான உண்மைக் காரணம் கண்டறியப்பட்டு நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது .

அத்துடன் குறித்த அமர்வில் மட்டக்களப்பு மாநகர சபையினால் கொண்டுவரப்பட்ட 21 உபவிதிகள் தொடர்பில் பல்வேறு வாத பிரதி வாதங்கள் நடைபெற்றதற்கமைய மாநகர உறுப்பினர்களுடனான சிறப்பு கலந்துரையாடலின் மூலம் குறித்த உபவிதிகளை பரிந்துரை செய்வதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

# 48 போதைதரும் மாத்திரைகளுடன் போதைப் பொருள் வியாபாரி கைது

## மட்டு. வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிறைந்துறைசேனை, ரயில்வீதியில்வைத்து 48 போதை மாத்திரைகளுடன் போதைப்பொருள் வியாபாரி ஒருவரை கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சம்பவதினமான வியாழன் வாழைச்சேனைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ்குழுவினரோடு இணைந்து குறித்த போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த 48 போதை மாத்திரைகளுடன் போதைப் பொருள் வியாபாரியை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.











# பார்சிலோனா கழத்திலிருந்து வெளியேறினார் மெஸ்ஸி

## நிதிப்பற்றாக்குறையால் ஒப்பந்தம் கைச்சாத்தாகவில்லை

ஆறு முறை பலோன் டி'ஓர் விருதை வென்ற கால்பந்தாட்ட வீரர் லியொனல் மெஸ்ஸி, பார்சிலோனா அணியை விட்டு வெளியேறினார் என்று பார்சிலோனா கழகம் இன்று அறிவித்துள்ளது.

'பார்சிலோனாவுக்கும் மெஸ்ஸிக்குமிடையே ஓர் உடன்பாட்டை எட்டி இரு தரப்பினரும் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற தெளிவான எண்ணம் இருந்தாலும், நிதி மற்றும் தடைகள் காரணமாக ஒப்பந்தம் கையெடுத்தாகவில்லை என்று பார்சிலோனா அணி நிர்வாகம் கூறியுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இளம் வீரராக பார்சிலோனா அணியில் இணைந்த லியொனல் மெஸ்ஸி 21 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அணியில் இருந்து வெளியேறியுள்ளார்.

லியொனல் மெஸ்ஸி பார்சிலோனா அணிக்காக இதுவரை 778 போட்டிகளில் விளையாடி 672 கோல்கள் அடித்துள்ளார். அத்துடன் 305 கோல்கள் அடிக்க துணையும் புரிந்துள்ளார். தனிப்பட்ட ஒரு கழக அணிக்காக பீலே 643 கோல்கள் என்ற சாதனையை முறியடித்து மெஸ்ஸி புதிய சாதனை படைத்திருந்தார். பார்சிலோனா அணிக்காக முப்பதுக்கும் மேற்பட்ட வெற்றிக் கிண்ணங்களையும் அவர் பெற்றுத்தந்திருக்கிறார். நிதிப்பற்றாக்குறை காரணமாகத் தடுமாறிவரும் பார்சிலோனாவுடனான ஒப்பந்தத்தில் மெஸ்ஸி பல விட்டுக் கொடுப்புகளைச் செய்திருந்தால், பெரும்பாலும் அவரது ஒப்பந்தம் நீடிக்குமென்ற எதிர்பார்ப்பு சில வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்தது. ஆயினும், அவரது விட்டுக்கொடுப்புகளையும் தாண்டி நிதிச் சிக்கல் பார்சிலோனாவுக்கு இருப்பதாகத் தெரிகிறது.

பார்சிலோனாவுடனான ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதால் மெஸ்ஸி எந்தக் கழகத்தில் வேண்டுமானாலும் இணைந்து விளையாடலாம். 34 வயதான ஆர்ஜென்டீனா நாட்டவரான மெஸ்ஸி, பார்சிலோனாவிலிருந்து விலகியுள்ளமை அந்த அணியின் இரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்தி யுள்ள போதிலும் அவர் அடுத்து எந்தக் கழக அணியுடன் இணைவார் என்ற எதிர்பார்ப்பும் மெஸ்ஸி இரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

பார்சிலோனா கழகம், மெஸ்ஸியை மட்டுமல்லாது மேலும் சில தன்னுடைய முக்கிய வீரர்களையும் நிதிப்பற்றாக்குறையால் இழக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இந்தவருட கிரிக்கெட் போட்டிகளிலிருந்து காயத்தினால் விலகினார் ஆர்ச்சர்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளரான ஜோப்ரா ஆர்ச்சர், இந்தியாவுக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணத்தில் முழங்கைக் காயத்தால் அவதிப்பட்ட நிலையில் 14 ஆவது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்காது விலகியிருந்தார். கடந்த மே மாதம் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

காயத்தில் இருந்து மீண்ட பின் உள்ளூர் கவுண்டி போட்டிகளில் பங்கேற்றார். ஆயினும், இவரது வலது முழங்கையில் மீண்டும் வலி ஏற்பட்டதால் 'ஸ்கான்' எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதில், மீண்டும் காணம் ஏற்பட்டிருப்பது உறுதியானது.

இதனையடுத்து இந்த ஆண்டு நடக்கவுள்ள அனைத்துக் கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர், ஆஸ் டெஸ்ட் தொடர், ரி-20 உலகக் கிண்ணத் தொடர்கள் எதிலும் பங்கேற்கமாட்டார் என்று இதுவரை 13 டெஸ்ட், 17 ஒருநாள், 12 ரி-20 போட்டிகளில் இங்கிலாந்துக்காக விளையாடியிருக்கும் 26 வயதான ஆர்ச்சர், நம்பிக்கை தரும் வேகப் பந்துவீச்சாளராக வளர்ந்துவந்திருந்தார்.

சமீபத்தில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ், மன அழுத்தம் காரணமாக காலவரையின்றி கிரிக்கெட்டில் இருந்து விலகியிருக்கப்போவதாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட்டின் 3ஆம் நாள் ஆட்டம் இன்று

இந்தியா–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இங்கிலாந்தின் நொட்டிங்ஹாம் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 183 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் தலைவர் ஜோ ரூட் மட்டும் அரைச்சதம் அடித்தார்.

இந்திய அணியின் பும்ரா 4, மி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். அதனையடுத்து அணி தன்னுடைய முதல் இன்னிங்சை தொடங்கி ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களை எடுத்தது.

இரண்டாவது நாளான நேற்று இந்திய அணியில் ரோகித் சர்மாவும், கே.எல்.ராகுலும் ஆட்டத்தை தொடர்ந்தனர். இருவரும் மிக நேர்த்தியான டெஸ்ட் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். விக்கெட்டைப் பறிகொடுத்துவிடக் கூடாது என்பதில் அவதானமாக இருந்து இருவரும் ஆடினர். இந்த ஜோடியை 38ஆவது ஓவரிலேயே இங்கிலாந்து அணியால் பிரிக்க முடிந்தது. 97 ஓட்டங்களைப் பெற்றவேளையில் இந்தியா தனது விக்கெட்டை இழந்தது. 36 ஓட்டங்களைப் பெற்ற ரோகித் சர்மா ரொபின்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் இந்தியா அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

புஜாரா 4 ஓட்டங்களோடும், விராட் கோலி முதல் பந்திலேயே ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழக்க, 5 ஓட்டங்களைப் பெற்றவேளையில் ரஹானே ரன் அவுட் ஆகி வெளியேறினார். இதனால், இந்திய அணி 15 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்தது. நேற்றை நாள் ஆட்ட முடிவின்போது கே.எல்.ராகுல் 57 ரிசப் பன்ட் 7 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்காதிருந்தனர். நேற்றை ஆட்டம் மழை காரணமாக குறித்த நேரத்துக்கு முன்பாகவே நிறைவுபெற்றிருந்தது.

இன்றைய மூன்றாம் நாள் போட்டியும் மழை காரணமாக தாமதித்தே ஆரம்பமாகியிருக்கிறது.

# டோக்கியோ ஒலிம்பிக்; 34 தங்கப்பதக்கங்களோடு சீனா முதலிடத்தில்; முன்னேறுகிறது பிரித்தானியா



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் தங்கங்களுடன் சீனா தொடர்ந்தும் முதலிடம் வகித்து வருகின்றது. 34 தங்கம், 24 வெள்ளி, 17 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 75 பதக்கங்களைச் சீனா வென்றுள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா, 31 தங்கம், 35 வெள்ளி 29 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 95 பதக்கங்களைப் பெற்றுள்ளது. 23 தங்கம், 10 வெள்ளி, 15 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 48 பதக் கங்களைப் பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன. பிரித்தானியா பதக்கப்பட்டியலில் முன்னேற்றம் நான்காமிடத்துக்கு வந்துள்ளது. 18 தங்கம், 18 வெள்ளி, 19 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 55 பதக்கங்களை பிரித்தானியா பெற்றுள்ளது.

ரஷ்யக் குழு 17 தங்கங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 62 பதக்கங்களைக் கைப்பற்றியிருக்கும் அதே நேரம், ஆஸ்திரேலியா 17 தங்கத்துடனேயே இருப்பதால் வரிசையில் 6ஆம் இடத்துக்குப் பின் னகர்ந்திருக்கிறது.

ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொத்தலாவல சட்டத்தை முழுமையாக எதிர்ப்போம்! ஹற்றனில் போராட்டம்






கொத்தலாவல சட்டத்தை முழுமையாக எதிர்ப்போம் தெரிவித்து ஹற்றன் நகரில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொத்தலாவல பிரேரணைக்கு எதிரான கூட்டு நிலைய செயற்பாட்டாளர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

இவர்கள் தங்களது கோரிக்கைகளை பதாதைகள் ஊடாக வெளிப்படுத்தி அதை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி பேரணியாகச் சென்றனர்.

அதன்பின்னர் ஹற்றன் நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் இதன்போது கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் போராட்டங்கள், கைது நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் முழக்கங்களை எழுப்பினர்.

# ஹிஷாலினி மரணம்; ரிஷாத் விளக்கம்!

ஹிஷாலினியின் தன்னையும் தனது குடும்பத்தினரையும் மிகவும் வேதனைக்கு உட்படுத்தியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இலங்கையை உலுக்கிய ஹிஷாலினியின் மரணம் தொடர்பாக நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் விளக்கமளிக்கும்போதே ரிஷாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகமேலும்தெரிவித்துள்ள அவர் –

ஹிஷாலினி 16 வயதைக் கடந்ததன் பின்னரே எமது வீட்டுக்கு தரகர் ஊடாக வருகை தந்தார். அவருக்கு தனியறை வழங்கப்பட்டதோடு, அதனுள் குளியலறை வசதிகள் உள்ளிட்ட அனைத்து இருந்தன.

ஹிஷாலினி எமது வீட்டுக்கு வந்ததைத் தொடர்ந்து அவரது பெற்றோர்கள் ஒரு நாளேனும் ஹிஷாலினியை பார்ப்பதற்காக வரவில்லை. ஆனாலும் நாங்கள் சகோதரி ஹிஷாலினிக்கு எந்தவொரு குறைகளையும் வைக்கவில்லை. அவரை நன்றாகவே கவனித்து வந்தோம்.

கடந்த 3ஆம் திகதி காலை 6.45 மணியளவில் ஹிஷாலினி தீ வைத்துக் கொண்டு அலறியுள்ளார். சத்தம் கேட்டு எனது மாமாவும் மாமியும் என்ன செய்வதென்றே அறியாமல் அந்த தீயை அணைக்க முயற்சித்துள்ளனர்.

எனினும் முடியவில்லை என்பதால், இருந்த நீச்சல் தடாகத்தில் குதிக்குமாறு தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் அவரது உடலில் உள்ள தீயை கடும் போராட்டத்துக்குப் பின்னரே அணைத்துள்ளனர்.

அதன்பின்னர், 1990 என்ற அவசர இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி, ஹிஷாலினியை சரியாக 7.33 மணியளவில் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

ஆனால், பொலிஸாரோ அவரை 8 மணிக்கு பின்னரே வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் என நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர் என ஊடகங்கள் வாயிலாகத் தெரிந்துகொண்டேன்.

ஹிஷாலினி இறக்கும் நாள் வரையில் தினமும் எனது மனைவி அவரைப் வைத்தியசாலைக்குச் சென்று வந்தார். அவருடைய உடலில் பெரும் பகுதி பாதிப்படைந்துள்ளதாகவும் அதனைச் சரிசெய்ய அவருக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவேண்டுமெனவும் மருத்து–வர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இதற்காக 10 லட்சம் வரையில் செலவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, எவ்வளவு ரூபா செலவானாலும் பரவாயில்லை எனவும் ஹிஷாலினி எமக்கு மீண்டும் தேவையெனவும் எனது மனைவி மருத்துவரிடம் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு நாங்கள் ஒவ்வொருநாளும் ஹிஷாலினியை குணப்படுத்துவது தொடர்பாக முயற்சித்து வந்தோம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அவர் வைத்தியசாலையில் இருந்த நாள் வரையில் ஹிஷாலினியின் தாய் வைத்தியசாலைக்கு வந்து சென்றார் எனவும் சுமுகமாக உரையாடி இருந்தார் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர் இறந்ததன் பின்னர் அவரது தாய் உண்மைக்குப் புறம்பாக சில அரசியல்வாதிகளின் கருத்துக்கு செவிசாய்த்து, சில ஊடக விபச்சாரிகளோடு சேர்ந்து வேறொன்றை சொல்கிறார்.

ஹிஷாலினிக்கு இருட்டறை வழங்கப்பட்டதாகவும் அவரை கொடுமைப்படுத்தியதாகவும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி யுள்ளார்எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் ஒருமுறைகூட எமது வீட்டுக்கு வராமல் எவ்வாறு இப்படி தெரிவித்தார் என்பது எனக்குப் புரியவில்லை.

எந்தவொரு குற்றமும் செய்யாமல் எனது மனைவியும் மாமாவும் மைத்துனரும் விளக்கமறியிலில் இருக்கிறார்கள். இன்னும் எனது பிள்ளைகள் இருவர் மாத்திரமே எஞ்சியிருக்கிறார்கள். அவர்களை மட்டுமே விட்டுவைத்திருக்கிறார்கள்.

ஹிஷாலினி எமது வீட்டுக்கு பணிக்கு வந்தவுடன் அவரது பெற்றோருக்கு 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. பின்னர் அவர் பணியாற்றிய 7 1/2 மாத காலப் பகுதியில் 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டதோடு, அவர் இறந்ததன் பின்னர் ஒரு 50 ஆயிரம் ரூபாவும் அவரது குடும்பத்தினருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

எனவே, ஹிஷாலினி மரணத்தில் எந்தவொரு சந்தேகமும் இருக்கக்கூடாது. இந்த விடயத்தில் முழுமையான விசாரணைகள் இருக்க வேண்டும்.

சுதந்திரமானதும் நேர்மையானதுமான விசாரணைகள் இடம்பெறுகின்றமை அவசியம். குற்றவாளியாராக இருந்தாலும் அவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமண நிகழ்வுகள் தொடர்பில் புதிய சுகாதார நடைமுறைகள்

500 இருக்கைகள் கொண்ட திருமண மண்டபவங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் 500 இருக்கைகளுக்கு குறைந்த திருமண மண்டபவங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 100 பேருக்கு மாத்திரமே கலந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மரண வீடொன்றில் ஒரு சந்தர்ப்பத்தில் 25 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் கொரோனாத் தொற்றுறுதி



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிடயம்தொடர்பில்அவரது முகப்புத்தகத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

அவர் தற்போது அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் அமைக்குப்பட்டுள்ள கொவிட் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பு நீதிமன்ற வளாக பகுதியில் பலத்த பாதுகாப்புகள்

மட்டக்களப்பு நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு, அதிகளவு மக்கள் கூடியதால், அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நேற்று பல்வேறு சிறைச்சாலைகளில் இருந்து மட்டக்களப்புக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட 62 பேர் மட்டக்களப்பு உட்பட பல்வேறு சிறைகளிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கொரோனா பரவல் காரணமாக கடந்த 6 மாதங்களுக்கு மேலாக அவர்கள் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படாத நிலையில், நேற்று நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களின் குடும்ப உறவினர்கள் நீதிமன்றுக்கு முன்பாகத் திரண்டதால் அப்பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றுக்கு முன்பாக மற்றும் நீரூற்று பூங்கா போன்ற பகுதிகளில் பெருமளவானோர் காத்திருந்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிமன்ற பகுதிகளில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் தீவிரப் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2021இல் வெளியிடப்பெற்றது.